சுபமங்கள ஸ்தோத்ர சீரீஸ் : 3

செவ்வாய் பகவான்

(ஆராதனை முறை, அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை, கவசம், மந்திரம், காயத்ரி புராண வரலாறுகள் அடங்கியது.)



நான்காம் பதிப்பு 1994]   [விலை: ரூ. 3-00

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர், (பஸ் நிலையம் அருகில்)
சென்னை-600 017.

வாங்கி விட்டீர்களா ? வெளிவந்துவிட்டன!

நாராயணீயம் (5 வால்யூம்கள்)

(1000-க்கும் மேலான சுலோகங்கள்)

பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரியார்-நாராயணியத்தைத் தமிழுலகுக்கு அறிமுகம் செய்தவர். ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் குரு. எனவே நாராயணியத்தை இன்று பாராயணம் செய்வோரின், உபந்யாஸம் செய்வோரின் குரு. அவர்தான் எங்களுக்குக் குருவாக இருந்து நேரில் இதைப் போதித்தவர். கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் குருவாயூரப்பன். அவருடைய பிரசாதத்தைப் பெற, ரோகங்களும் சோகங்களும் நீங்க, எல்லாப் பாக்யமும் பெற பாராயணம் செய்ய வேண்டிய ஸ்தோத்ரம்.

வால்யூம் 1 : பக்தனாகவும் யோகியாகவும் ஆகும் நெறியை அறிந்து அப்யாஸம் செய்ய, கண்ணனை நேரில் காணச் சிறந்த நூல்.

வால்யூம் 2 : ராம-நரஸிம்ஹ-மத்ஸ்ய-கூர்ம-வாமன அவதாரங்கள். பிரஹ்லாதன்-கஜேந்திரன்-பலிச்சக்கரவர்த்தி-அஜாமிளன்; இவர்களின் சரித்திரம், பாற்கடலில் லக்ஷ்மீ-மோஹினீ - தன்வந்திரி-காமதேனு தோன்றல்-விஷத்தைப் பரமசிவன் பானம் செய்தல் முதலியவை அடங்கியது.

வால்யூம் 3: வாமன - மத்ஸ்ய - தத்தாத்ரேய - பரசுராம-மாயாதேவி அவதாரங்களும், பாகவத தசம ஸ்கந்தம் ஆரம்பமும், கண்ணனின் அவதாரமும் பாலக்ரீடையும்

வால்யூம் 4 : தாமோதரன் - பிருந்தாவனத்தில் கோகுலம் அமைத்தல்-வத்ஸ- பக-தேனுக-ப்ரலம்ப-சங்கசூட-அரிஷ்ட கேசீ-வ்யோம அசுரர்களின் வதம்—காளியமர்த்தனம்-கோவர்த்தன உத்தரணம்-கோவிந்த பட்டாபிஷேகம்-கோபிகைகளின் வஸ்திர அபஹரணம் - ராஸக்ரீடை-கோபிகா-கீதம், நம்பூதிரிக்குக் குருவாயூரில் ராஸக்ரீடா-தரிசனம்.

வால்யூம் 5 : கம்ஸ-சிசுபால-நரகாசுர வதம்-கண்ணனின் குரு ஸாந்தீபர்; தக்ஷிணை என்ன? பலராம-ருக்மணீ-ஸத்யபாமா-திரௌபதீ - மான ஸம்ரக்ஷணம் - கீதோபதேசம் - குசேலர் / மார்க்கண்டேயர் ஆகியோருக்கு அநுக்ரஹம், நம்பூதிரிக்குக் குருவாயூரப்பனின் தரிசனம் அடங்கியது.

உ

ஸ்ரீராமஜெயம்



செவ்வாய்ப் பகவான்

மங்களத்தையும், தோள்வலியையும், சக்தியையும் அளிப்பவன் செவ்வாய். அவனைப் பூமிநாதன் என்றும் சொல்வார்கள். ராசிச் சக்கரத்தில் விருச்சிகத்தையும் மேஷத்தையும் சொந்த தன் ஆட்சிவீடாகக் கொண்டவன். கடகத்தில் நீசன்; மகரத்தில் உச்சன்.

செ—1

மற்றக் கிரஹங்களை விட அதிகமாக இந்தச் செவ்வாய் திருமண விஷயத்திலும் குறுக்கிட்டு மக்களை ஆட்டி வைக்கிறான். இவனால் வரும் தோஷம் செவ்வாய்த் தோஷம் அல்லது குஜதோஷம். கு என்றால் பூமி. பூமியின் புத்திரனானதால் குஜன் என்ற பெயர் வந்தது. செவ்வாய் ஒருவரின் ஜாதகத்தில் 2, 4, 7, 8, 12-ஆம் இடங்களில் இருந்தால், அந்த ஜாதகன் செவ்வாய்த் தோஷம் உடையவன் என்று பொருள். அதே மாதிரி குஜ தோஷம் கொண்ட பெண் ஜாதகத்தையே அதனுடன் இணைக்க வேண்டும். 7, 8ஆம் இடங்கள் களத்திர ஸ்தானம்; அதில் செவ்வாயிருந்தால் மிகவும் தோஷம் என்று சொல்வார்கள். ஆனால் இந்தத் தோஷத்துக்கும் சில விலக்குகள் இருக்கின்றன:

சதுஷ் ஸப்தமகோ பௌமோ...........
மேஷகர்காலி நக்ரக:

யதா ராஶௌ ஶுப: ப்ரோக்த:
குஜாத் தோஷ: ந வித்யதே ||

என்று காளிதாசர் இயற்றிய **ஜாதக சந்திரிகையில்** இந்த விலக்குக் கூறப்பட்டிருக்கிறது. ஆண் - பெண் ஜாதகங்களில் கடகம், மேஷம், விருச்சிகம், மகரம் ஆகிய ராசிகளில் செவ்வாய் இருந்து அந்த ராசிகள் 4, 7, 8ஆம் இடங்களாயினும் செவ்வாய்த் தோஷம் இல்லை என்று இந்தச் சுலோகத்திலிருந்து தெரிகிறது.

மேலும் 1, 2, 4, 8, 12 ஆகிய ராசிகள் சரராசிகளாக இருந்து அந்த இடங்களில் செவ்வாய் இருந்தாலும் செவ்வாய்த் தோஷத்துக்குப் பரிகாரம் என்றும் **ஜாதக சந்திரிகை** கூறுகிறது. குரு-புதனுடன் செவ்வாய் சேர்ந்திருந்தாலோ பார்க்கப்பட்டாலோ செவ்வாய்த் தோஷப் பரிகாரம் உண்டு என்றும் கூறப்பட்டிருக்கிறது.

செவ்வாய் முருகனின் அம்சம் கொண்டவன் என்று சோதிட சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதனால் பழனி

வைத்தீசுவரன் கோயில், திருச்சிறுகுடி ஆகிய மூன்று தமிழ் நாட்டுத் தலங்கள் செவ்வாய்க் கோளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்திலுள்ள வைத்தீசுவரன் கோயிலை அங்காரக க்ஷேத்திரம் என்பார்கள். அங்கே செவ்வாய்க்குத் தனிச் சந்நிதியே இருக்கிறது. இங்கே உள்ள முத்துக்குமார சாமி மிகவும் அழகான மூர்த்தி. மிகவும் வரப்பிரசாதி. ஒவ்வொரு மாதமும் கிருத்திகையன்று இங்கே விசேஷமாக இருக்கும். விடாமல் கிருத்திகையன்று போய் முத்துக் குமரனைத் தரிசித்துச் சந்தனக் குழம்பு வாங்கிச் சாப்பிட்டு மன அமைதி பெறும் பக்தர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.

வைத்தீசுவரன் கோயிலுக்குப் புள்ளிருக்கும் வேளூர் என்பது பழைய பெயர். இந்தக் கோயிலின் மூர்த்தி வைத்திய நாதர்; அம்பிகையின் திருநாமம் தையல் நாயகி. சுக்கிர வாரந்தோறும் இந்த அம்மனைத் தரிசித்தால் பிறவிப் பிணி அறும் என்று சமயக்குரவர்கள் பாடித் துதித்துள்ளார்கள். புள்—சடாயு, இருக்கு—ரிக்வேதம், வேள்—முருகப் பெருமான், ஊர்—சூரியன். சடாயுவும் வேதமும் முருகப் பிரானையும் சூரியனையும் பூசித்ததால், இந்தத் திருத்தலத்துக்குப் புள்ளிருக்கு வேளூர் என்ற திருநாமம் அமைந்தது.

மணி மந்திர ஔஷதங்களால் தீர்க்க முடியாத தீராத நோயெல்லாம் இந்தத் தலமூர்த்தியை ஒரு மண்டலம் வழிபட்டு வந்தால், தீர்ந்து குணமாகிவிடும் என்பது அநுபவத்தில் எழுந்த உண்மை. இங்கே புற்று மண்ணை ஔஷதமாகத் தருவார்கள். வைத்தியத்துக்கே நாதனாக விளங்குவதால் வைத்தியநாதன் என்ற திருநாமம் சுவாமிக்கு அமைந்தது.

விண்ணுலக ரம்பைகளுக்கும் மண்ணுலக மடந்தையர்களுக்கும் நாயகியாக, தலைவியாக இருப்பதால் தையல்

நாயகி என்ற திருப்பெயர் அம்பிகைக்கு அமைந்தது. நாவுக்கரசரும் ஞானசம்பந்தப் பெருமானும் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். ''செடியாய உடல் தீர்ப்பான், தீவினைக்கோர் மருந்தாவான்'' என்று சம்பந்தர் இந்தத் தலத்துப் பெருமானைப் பாடிப் பரவுகிறார்.

அங்காரக க்ஷேத்திரமான இந்தத் தலத்திலுள்ள முத்துக் குமாரசாமியின் மேல் குமரகுருபரர் ஒரு **பிள்ளைத் தமிழ்** பாடியிருக்கிறார். இந்தக் குமார சாமியின் பிள்ளைத் தமிழைக் கிருத்திகைதோறும் பக்தியுடன் ஓதுவார் முருகனின் அருளைப் பெறுவர் என்று கூறுவார்கள். இந்தத் தலத்திலுள்ள பெரியோர்களில் சிலர், தங்களுடைய அநுபவங்களைக் கூறக்கேட்டால் மெய் சிலிர்க்கும்.

செவ்வாய்க் கிழமைகளில் இந்தத் தலத்துப் புண்ணிய தீர்த்தமான சிந்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, முருகனையும் செவ்வாயையும் வணங்கினால் எண்ணியது எண்ணியபடி நடக்கும் என்பது பெரியோர்களின் அநுபவம். இந்தத் தலத்து மூர்த்தியைப் பூசித்தே அங்காரகன் கிரக பதவியை அடைந்தான் என்று **தலபுராணம்** கூறுகிறது. வைத்தியநாதப் பெருமானின் ஆக்ஞைப்படி, இந்தத் தலத்துப் புஷ்கரணியில் நீராடி, அங்காரகனைச் செவ்வாய்க் கிழமைதோறும் வழிபட்டால் அங்காரகன் தோஷங்களை விலக்கி நன்மை செய்வானாம்.

ஃ ஃ ஃ

ஆறுபடை வீடுகளில் ஒன்றானது பழனி; செவ்வாயின் இன்னொரு தலம் பழனி. தென்னகத்தில் மிகவும் பிரபலமான தலம். பழனி வடிவேலன் கோவணாண்டியாகக் காட்சியளிக்கிறான். நாரதர் அளித்த மாம்பழத்தின் காரணமாக, பிள்ளையாருக்கும் முருகனுக்கும் போட்டி ஏற்பட்டு முருகன் கோபித்துக் கொண்டு பழனியில் ஆண்டியாக

எழுந்தருளியிருக்கிறான் என்பது கதை. இந்தக் கதையைப் **பழனித் தலபுராணத்தில்** விவரமாகக் காணலாம்.

''ஜெகமுழுது முன்பு தும்பிமுகவனொடு தந்தை முன்பு திகிரி வலம் வந்த செம்பொன் மயில்வீரா'' என்று அருணகிரிப் பெருமானும், **திருப்புகழில்** இந்தக் கதையைப் குறித்திருக்கிறார்.

கோபத்துடன் பழனி மலையில் முருகன் எழுந்தருளியதும் தங்களுடைய கண்மணியை இழந்த பார்வதியும் பரமசிவனும் திருவாவினன்குடிக்கு வந்து, ''அப்பா, நீயே ஞானப் பழம், தந்தைக்கே உபதேசித்த சுவாமிநாதன் நீ, குன்றுதோராடும் குமரன் நீ! ஞானக்கனி நீ! உனக்கு வேறு கனி வேண்டுமோ? பழம் நீ'' என்று அம்மையும் அப்பனும் கனிவுடன் முருகனை அழைத்ததே, 'பழநி' என்று திருப்பெயராக அமைந்தது.

''அதிசயம் அநேகமுற்ற பழநிமலை'' என்று அருணகிரி நாதப் பெருமான் இம்மலையை அழைக்கிறார். மலையின் உச்சியில் ஸ்ரீஞான தண்டாயுதபாணியின் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இந்தத் திருத்தல மூர்த்தியான முருகனின் மூர்த்தத்தில் செவ்வாயின் அம்சமும் இணைந்திருக்கிறது என்றும், இந்த முருகனை வழிபட்டுச் செவ்வாயானவன் பேறு பெற்றான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. பழநிமுருகனை வழிபட்டால் செவ்வாய்த் தோஷ நிவர்த்தி ஏற்படும் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஃ ஃ ஃ

செவ்வாய்க் கிரகம் வானத்தில் செம்மையாகக் காணப்படுவதால், செவ்வாய் என்று அழைக்கப்படுகிறது. நவக்கிரக மண்டலத்தில் இது மூன்றாவதாக இடம் பெற்றி

ருக்கிறது. மனித இனத் தோற்றத்துக்குக் காரணமான பல கதைகள் வழங்கப்படுகின்றன:

ஆதாம்—ஜீவா என்ற தம்பதியரின் மூலமே மனித இனம் பெருகத் தொடங்கியது என்று கூறுவார்கள். ஆதாமு சிவப்பு, செவ்வாயும் சிவப்பு; நீரையும் பூமியையும் முறையே குறிக்கின்றன. ''பஞ்ச பூதங்களால் ஆனது இந்தச் சரீரம்'' என்கிறது நமது சித்தாந்தங்கள். ''மனித ஆத்மா பூமியாலும் நீராலும் சிருஷ்டிக்கப்பட்டது'' என்றார் மோசஸ். அதனால் செவ்வாயை மங்களன் என்றும் குஜன் என்றும் அழைக்கிறார்கள்.

செவ்வாய் ஒரு தாயின் சம்பந்தமே இல்லாமல் அவதரித்ததாக **மகாபாரதத்தில்** கூறப்பட்டிருக்கிறது. ஆதாமும் இதே மாதிரி ஜனித்தவன் தானாம். செவ்வாயின் சிவப்பு நிறத்துக்கும் மனித இரத்தத்துக்கும் தொடர்பு இருக்கிறது. ஜூனோ என்ற தாய்க்குச் செவ்வாய் பிறந்ததாக **கிரேக்கப் புராணங்கள்** கூறுகின்றன. ஆனால் ஓர் ஆணின் சம்பந்தம் இல்லாமல் பிறந்தானாம். கார்த்திகேயனும் அப்படி அவதரித்ததாக நம் புராணங்கள் கூறுகின்றன. ருத்ரனின் அம்சமான அக்கினிப் பிழம்புகள் குழந்தைகளாக மாற, அதைக் கங்கை எடுத்து வளர்த்ததாகக் **கந்தபுராணம்** கூறுகிறது. செவ்வாய், செம்மீன் என்று **புறநானூற்றில்** குறிக்கப்பட்டிருக்கிறது.

உமாதேவி கைலாசபதியிடமிருந்து ஒரு சமயம் விலகித் தவம் புரிகிறாள். தவத்தின் உக்கிரத்தில் ஒரு சொட்டு வேர்வை நிலத்தில் விழுகிறது. அந்தச் சொட்டே 'மங்கலன்' என்ற குழந்தையாகிறது. உமாதேவி அந்தக் குழந்தையை அன்புடன் வளர்க்கிறாள். குழந்தை வளர்ந்ததும் தவநெறியில் ஈடுபடுகிறது. தவத்தின் வலிமையால், மங்கலனைச் சுற்றி அக்கினிப் பிழம்புகள் வளையமாக வீசுகின்றன. மங்கலனின் தவ வலிமையைக் கண்டு இறைவன், அவனுக்குக் கிரக பதவி அளிக்கிறான்.

இந்தக் கதையே இன்னொரு விதமாகவும்வழங்குகிறது: பாரத்வாஜ மகரிஷி அணிந்திருந்த ருத்திராட்ச மணி ஒன்றிலிருந்து மங்கலன் தோன்றுகிறான். உமாதேவி அந்தக் குழந்தையை எடுத்து வளர்க்கிறாள். மகரிஷி அந்தக் குழந்தைக்குச் சகல சாஸ்திரங்களையும் கற்பிக்கிறார். கல்வி முடிந்ததும் மங்கலன் தவமியற்றச் செல்கிறான். தவ வலிமையால் கிரஹப் பதவியை அடைகிறான்.

யுத்தத் தளபதியான வீரபத்திரர் செவ்வாயின் உருவில் வானத்தை மங்கலமாகவும் அழகாகவும் விளங்கச் செய்வதற்காகக் கிரஹமானார் என்றும் ஒரு கதை வழங்குகிறது.

தட்சன் யாகம் செய்கிறான். தட்சனுடைய புதல்வியான தாக்ஷாயணி சிவபெருமானை மணந்து வாழ்கிறாள். தன் தகப்பனார் யாகம் செய்வதைப் பார்க்க விரும்பி, சிவனிடம் அனுமதி கேட்கிறாள். ''அங்கே போனால் உனக்கு மரியாதை கிடைக்காது'' என்று சிவபெருமான் எவ்வளவு தடுத்துக் கூறியும் கேளாமல் தாக்ஷாயணி யாகத்தைக் காணச் செல்கிறாள்.

செருக்கு மிகுந்த தட்சன், யாகத்தில் சிவனுக்குரிய அவிர்பாகத்தைக் கொடுக்காமல், சிவபெருமானைத் தாழ்வாகப் பேசுகிறான். தாக்ஷாயணி வெகுண்டுதிரும்புகிறாள். தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அறிந்த சிவபெருமான், வீரபத்திரரை அனுப்பி, அந்த யாகத்தை அழிக்கச் செய்கிறார். யாகத்தை அழித்ததோடு நிற்காமல் வீரபத்திரர் கொடுஞ்செயல்கள் பல செய்யத் தொடங்குகிறார். தேவர்கள் அவதியுற்று சிவபெருமானிடம் முறையிடுகின்றனர். சிவபெருமானின் கோபாக்கினியைத் தாங்க முடியாத வீரபத்திரர், தம்மை மன்னிக்கும்படி வேண்டுகிறார். சிவனின் அருளால் வீரபத்திரனின் பயங்கரத் தோற்றம் மறைகிறது. ஒளி வீசும் கோளாக, அங்காரகனாக வீரபத்திரர் விண்ணில் நிலை பெறுகிறார். இந்தக் கதை **மத்ஸ்ய புராணத்**தில் உள்ளது.

செவ்வண்ணத்தினன், சிவந்த ஆடை, செவ்வண்ண மலர் மாலை, நான்கு கைகள்; சக்தியும் கருணையும் வலக் கைகளில், ஈட்டியும் மழுவும் இடக் கரங்களில்; செம்மறி யாட்டு வாகனம்-இப்படிச் செவ்வாயை நூல்கள் வருணிக் கின்றன. எட்டுக் குதிரைகள் பூட்டிய பொன் வண்ணத் தேரில் பவனி வருவதாகவும் சில நூல்கள் கூறுகின்றன. (அன்னப்பறவை வாகனம் என்றும் சோதிட நூல்கள் கூறு கின்றன.)

ரோமானியர்கள் யுத்தக் கடவுளாகச் செவ்வாயை வணங்கினார்கள்; செவ்வாய்க்குப் பல கோயில்களைக் கட் டியிருந்தார்கள். செவ்வாயின் ஆசியுடன் சென்றால் யுத் தத்தில் வெற்றி கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் தம் **நவாவரணக் கிருதிகளில்** செவ்வாயைப் பற் றிய கிருதியில் கீழ்கண்டபடி வருணித்திருக்கிறார்:

''பக்தர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுபவன்; செவ்வாய்க் கிழமைக்குத் தலைவன்; பூமியின் புத்திரன்; மேஷத்தையும் விருச்சிகத்தையும் தன் ஆட்சி வீடாகக் கொண்டவன்; சங்கு போன்ற அழகிய கழுத்தைப் பெற்ற வன்; மகரத்தில் உச்சம் பெற்றவன்; சகோதரப் பாவத் திற்குக் காரகன்; வைத்தீசுவரன் கோயிலில் சிலை கொண் டவன்; முருகனின் அம்சம் பெற்றவன்; சூரியன் சந்திரன் குரு ஆகிய கோள்களின் நண்பன்.

ஆறாத ரணங்கள், மூட்டுவலி ஆகியவற்றால் அவஸ் தைப்படுபவர்கள் செவ்வாயை ஆராதித்தால் சிறந்த குணம் ஏற்படும் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. ஜாதகத் தில் செவ்வாய் நல்ல நிலையில் இருந்தால் பூமியையும், செல்வத்தையும், செல்வாக்கையும் அபரிமிதமாக அளிப் பான்; கடன் தொல்லையிலிருந்தும் விடுபடச் செய்வான்.

''செவ்வாயின் கொடியில் செம்மறியாட்டுச் சின்னம் பொறித்திருக்கும் என்றும், அவந்தி நாட்டைச் சேர்ந்தவன் என்றும் பாரத்வாஜ கோத்திரத்தினன்'' என்றும் வடக்கத்தியச் சோதிட நூல்கள் சில தெரிவிக்கின்றன. செவ்வொளி வீசும் முத்து எப்போதாவது அரிதாகக் கடலில் கிடைக்குமென்றும், அதற்கு அங்காரகன் என்று பேர் என்றும் சிலப்பதிகாரத்தில் வருகிறது. க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த ஆண் கிரகம் செவ்வாய். செம்பு செவ்வாயின் உலோகம்; பவழம் அங்காரகனுக்கு உகந்த மணி. முருகனின் பக்தர்களுக்குச் செவ்வாய்க்கிழமை ஏற்றநாள்.

மைநல் தைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர் வர்க்கு நீணிலம் தனில ளிக்கும்
குசனின் மகனாம் செவ்வாய் குரைகழல் போற்றி
போற்றி!

என்று பழைய துதிபாடல் ஒன்று கூறுகிறது. முறைப்படிச் செவ்வாயை ஆராதித்தால் மனோதைரியமும் அரச சபையில் பேசும் ஆற்றலும் தோள்வலியும் போரில் வெற்றியும் கிடைக்கும் என்று மேற்சொன்ன துதிபாடல் கூறுகிறது

வீடு வாகனங்கள் சொத்துக்கள் வாங்க, செவ்வாய் நல்ல இடத்தில் ஜாதகத்தில் அமைந்திருக்க வேண்டும். அப்படி அமைந்தில்லாதவர்களும் செவ்வாய்க் கிரகத்தைப் பக்தியுடன் சாஸ்திர முறைப்படி ஆராதித்தால் நன்மைகள் பெருகும். துன்பங்கள் பரிதியைக் கண்ட பனி போல் மறையும்.

நவக்கிரக ஆராதனை முறை என்ற எமது நூல் கோள்களை முறைப்படி ஆராதித்து வணங்கும் முறைகளைக் கூறு

கிறது. அந்த முறைகளை அறிந்து செய்தால் மங்கலனான செவ்வாய் சகல சம்பத்துக்களையும் கொடுப்பான் என்பது நிச்சயம்.

ஒவ்வொரு கிரகத்தையும் எப்படி எந்த எந்த மந்திரங்களைக் கூறி ஆராதிக்க வேண்டும் என்பவற்றை விவரமாகக் கூறும் **நவக்கிரக ஆராதனை** என்ற நமது நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்; பயன் பெறலாம்; பரிகாரம் செய்து கொள்ளலாம்.

செவ்வாயை ஆராதிப்பதற்குரிய செவ்வாயின் கவசம், காயத்திரி, ஸ்தோத்திரம், மந்திரம் ஆகியவற்றைக் கீழே கொடுத்திருக்கிறோம். 108 அர்ச்சனை நாமாக்களும் உள்ளன. நவக்கிரகத்துடன் சேர்ந்தோ தனியாகவோ செப்புத் தகடுகளில் செவ்வாயின் பிம்பம் கிடைக்கும். அதை வாங்கி வைத்துக் கொண்டு கீழே கொடுத்துள்ள நாமாக்களால் அர்ச்சித்து, கவசத்தைப் பாராயணம் செய்யலாம். தொடர்ந்து 48 நாட்கள் (ஒரு மண்டலம்) செய்தால் செவ்வாய் மகிழ்ந்து உங்கள் விருப்பங்களை நிச்சயம் நிறைவேற்றி வைப்பார். இதற்குப் பக்தியும் சிரத்தையும் தான் அவசியம்.

கன்னிப்பெண்களும் ஜாதகத்தில் செவ்வாய்த் தோஷம் உள்ளவர்களும் கீழுள்ள செவ்வாயின் தோத்திரத்தையும் காயத்திரியையும் பாராயணம் செய்யலாம். பாராயணம் என்றால் அதிகமாக நியமத்துடன் செய்ய வேண்டுமோ என்று பயப்பட வேண்டாம். செவ்வாய்க் கிழமைகளில் ஸ்நானம் செய்துவிட்டு, நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு, சுத்தமான உடை அணிந்து கொண்டவுடன் இந்த மந்திரத்தைக் கூறலாம். பத்து நிமிஷம் உட்கார்ந்து சொல்ல நேரமில்லாதவர்கள் பிறவேலைகளைப் பார்த்துக் கொண்டே சொல்லலாம்; அதனால் தோஷமில்லை. எல்லாச் செயல்களுக்கும் பக்திதான் அடிப்படை.

கீழ்க்கண்ட செவ்வாயைத் துதியையும், ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர் அருளிய 'ஸௌந்தர்யலஹரீ' சுலோகத்தையும் பெண்கள் பாராயணம் செய்யலாம்:

தரணீ கர்ப்ப ஸம்பூதம் வித்யுத் காந்தி ஸமப்ரபம்
குமாரம் சக்தி ஹஸ்தம் ச மங்களம் ப்ரணமாம்யஹம்

ஸௌந்தர்ய லஹரீ என்பதற்கு அழகின் பிரவாஹம் என்று பொருள். அம்பிகையின் அருள் பிரவாஹத்தைக் கூறுவதால் இந்தப் பெயர் அமைந்தது.

ஸௌந்தர்ய லஹரீ சுலோகம் இது

தடில்லேகா தந்வீம் தபந-சசி-வைச்வாநரமயீம்
நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி
கமலாநாம் தவகலாம் ||
மஹா பத்மாடவ்யாம் ம்ருதித மலமாயேன மனஸா
மஹாந்த: பச்யந்தோ தததி பரமாஹ்லாத லஹரீம் ||

செவ்வாயின் காயத்திரீ

வீர த்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி |
தந்நோ பௌம: ப்ரசோதயாத் ||

அங்காரக மந்திரம்

ஓம் அஸ்ய ஸ்ரீ அங்காரக மஹாமந்த்ரஸ்ய, விரூபாக்ஷ ரிஷி:. காயத்ரீ ச்சந்த:, அங்காரகோ தேவதா, மம அங்காரக ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: | **கரன்யாஸ:** அங்காரகாய அங்குஷ்ட்டாப்யாம் நம: | தரணீஸுதாய

தர்ஜனீப்யாம் நம: | ரக்த வாஸஸே மத்யமாப்யாம் நம: | ரக்த லோசனாய அநாமிகாப்யாம் நம: | சக்தித்ராய கனிஷ்ட்டிகாப்யாம் நம: | கர்மபாவனாய கரதலப்ருஷ்ட்டாப்யாம் நம: | **அங்கன்யாஸ :** அங்காரகாய ஹ்ருதயாய நம: | தரணீ ஸுதாய ஶிரஸே ஸ்வாஹா | ரக்த வாஸஸே ஶிகாயை வஷட் | ரக்த லோசனாய கவசாய ஹும் | ஶக்தி தராய நேத்ரத்ரயாய வௌஷட் | கர்ம பாவனாய அஸ்த்ராய பட் | பூர்புவஸ்ஸுவ ரோமிதி திக்பந்த: | **த்யானம்:** ரக்த மால்யாம்பர தரம் ஹேமரூபம் சதுர்ப்புஜம் | ஶக்திஶூல கதாபத்மாந்தரந்தம் ஸ்வகராம்புஜை: | மேஷாரூடம் த்ரிகோணஸ்த்தம் பாவயேத் தரணீஸுதம் | **லமித்யாதினா மானஸ பூஜையை இப்போது செய்யவேண்டும்.**

மந்த்ரம்

அக்னிர் மூர்த்தா திவ: ககுத்பதி: ப்ருதிவ்யா அயம் | அபாகும் ரேதாகும்ஸி ஜின்வதி ||

அங்காரக கவசம்

ஓம் அஸ்யஶ்ரீ அங்காரக கவச மஹாமந்த்ரஸ்ய | விருபாக்ஷ ரிஷி: | அனுஷ்டுப்ச்சந்த: | அங்காரகோ தேவதா | அம் பீஜம் ஶம் **ஶக்தி:** ரம் கீலகம், மம ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே வினியோக: | **கரன்யாஸ:** ஆம் அங்குஷ்ட்டாப்யாம் நம: | ஈம் தர்ஜனீப்யாம் நம: | ஊம் மத்யகாப்யாம் நம: | ஐம் அநாமிகாப்யாம் நம: | ஔம் கனிஷ்ட்டிகாப்யாம் நம: | அ:கரதலகரப்ருஷ்ட்டாப்யாம் நம: | **அங்கன்யாஸ:** ஆம் ஹ்ருதாய நம: | ஈம் ஶிரஸே ஸ்வாஹா | ஊம் **ஶி**காயை வஷட் | ஐம் கவசாய ஹும் | ஔம் நேத்ரத்ரயாய வௌஷட் | அ:அஸ்த்ராய பட் | பூர்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: | **த்யானம்—**நமாமி அங்காரகம் தேவம் ரக்தாங்கம் வரபூஷணம் | சதுர்ப்புஜம் மேஷவாஹம் வரதம்ச வராக்ருதிம் **ஶ**க்தி ஶூல கதாஹஸ்தம் ஜ்வாலாபும் ே ஂ ர ர் கேசம் | மேரும் ப்ரதக்ஷிணம் யாந்தம் ஸர்வ தேவேஷ்டஸித்

திதம் லமித்யாதினா மானஸ பூஜையை இப்போது செய்ய வேண்டும். அங்காரக: ஶிரோ ரக்ஷேத் முகம் வை தரணீ ஸுத: | கர்ணௌ ரக்தாம்பர: பாது நேத்ரே மே ரக்த லோசன: | நாஸிகாம் மே ஶக்திதர: கண்டம் மே பாது பௌமக: | ரக்தமாலீ புஜௌபாது ஹஸ்தம் ஶூலதர ஸ்ததா | சதுர்ப்புஜோ மே ஹ்ருதயம் குக்ஷிம் ரோகாபஹாரக: | கடிம்மே பூஸுத: பாது பாதௌ பௌம: ஸதா மம | ஸர்வாணி யானி சாங்கானி ரக்ஷேத் மே மேஷவாஹன: |

பலஶ்ருதி: ய இதம் கவசம் திவ்யம் ஸர்வஶத்ரு விநாஶனம் | பூதப்ரேத பிஶாசானாம் நாஶனம் ஸர்வ ஸித்திதம் | ஸர்வரோகஹரம் ஸர்வ ஸம்பத் ப்ரதம்ஶுபம் | புக்திமுக்தி ப்ரதம் ந்ருணாம் ஸர்வ ஸௌபாக்யவர்த்தனம் | ருணபந்த ஹரம் நித்யம் படேத் ஶ்ரத்தா ஸமன்வித: | அங்காரக ப்ரஸாதேன ஸ காமான் லபதே த்ருவம் | ஸ்தோத்ர பாடம் து ஸம்குர்யாத் தேவஸ்ய அக்ரே ஸமாஹித: | ரக்த கந்தாக்ஷதை: புஷ்பை: தூபதீப குலோதனை: | மங்களம் பூஜயித்வா து மங்களாஹனி பக்தித: | ப்ராஹ்மணான் போஜயேத் பஶ்சாத் சதுரோ த்வாதஶாதவா | அனேன விதினா யஸ்து ஸர்வ ஸம்பத் ப்ரதாயகம் | வ்ரதம் ததேதத் குர்வீத ஸப்த வாரேஷு அதந்த்ரித: | தஸ்ய ஶஸ்த்ராணி உத்பலானி வன்ஹிஸ் ஸ்யாத் சந்த்ரஶீதல: | நசைவ வ்யத யந்த்யேன ம்ருகபக்ஷி கஜாதய: மஹாந்த தமஸே ப்ராப்தே மார்தாண்டஸ்ய உதயாதிவ | விலயம் யாந்தி பாபானி ஶதஜன்மார்ஜிதானி வை |

ருண விமோசக அங்காரக ஸ்தோத்ரம்

ஸ்கந்த உவாச | ருணக்ரஸ்த நராணாம் து ருணமுக்தி: கதம் பவேத் | ப்ரம்ம உவாச | வக்ஷ்யே அஹம் ஸர்வலோகானாம் ஹிதார்த்தம் ருணமோசனம் | ஸ்தோத்ரம் பூமி ஸுதஸ்யேதம் ஸம்ஶ்ருணுத்வம் ஸமாஹித: | ஓம் அஸ்யஶ்ரீ அங்காரக ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய | கௌதம ரிஷி:, அனுஷ்டுப் ச்சந்த: அங்காரகோ தேவதா, மம ருண விமோ

சன்ார்த்தே ஜபே வினியோக: | (த்யானம்) ரக்தமால்யாம் பரதர: ஶூல ஶக்தி கதாதர: | சதுர்ப்புஜோ மேஷகமோ வரதஸ்யாத் தராஸுத: | (ஸ்தோத்ரம்) மங்கள: முனி-புத்ர:ச ருணஹர்தா தனப்ரத: | ஸ்த்திராஸன: மஹா காய: ஸர்வ காம பலப்ரத: | லோஹித: லோஹிதாக்ஷ: ச ஸாமகானாம் க்ருபாகர:| தராத்மஜ: குஜ: பௌம: பூமித: பூமிநந்தன : | அங்காரக: யம ச ஏவ ஸர்வரோகாபஹா ரக: | வ்ருஷ்டே: கர்தா ச ஹர்தா ச ஸர்வ தேவை: ஸ பூஜித: |

பலஶ்ருதி: ஏதானி குஜ நாமானி நித்யம் ய: ப்ரயத: படேத் | ருணம் ச ஜாயதே தஸ்ய தனம் ப்ரோப்னோதி அஸம்ஶயம் ||

ப்ரார்த்தனா — அங்காரக மஹீபுத்ர பகவன் பக்த வத்ஸல | நமோ அஸ்து தே மமாஶேஷம் ருணம் ஆஶு வினாஶய | **ப்ரயோக விதி:** ரக்த கந்தைஶ்ச புஷ்பைஶ்ச தூபதீப குடோதனை: | மங்களம் பூஜயித்வா து மங்களா ஹனி பக்தித:| ஏகவிம்ஶதி நாமானி படித்வா து ததந்திகே| ருணரேகா: ப்ரகர்தவ்யா அங்காரகேண ததக்ரத: | தாஶ்ச ப்ரமார்ஜயேத் பஶ்சாத் வாமபாதேன ஸம்ஸ்ப்ருஶன் ||

மந்த்ர: அங்காரக மஹீபுத்ர பகவன் பக்தவத்ஸல | நமோ ஸ்துதே மமாஶேஷம் ருணம் ஆஶு விமோசய |

பலச்ருதி: ஏவம் க்ருதே ந ஸந்தேஹ:ருணம் ஹித்வா தனீ பவேத்|மஹதீம் ஶ்ரியம் ஆப்னோதி தத்பர: தனத: யதா ||

(அர்க்யம்) அங்காரக மஹீபுத்ர பகவன் பக்தவத்ஸல | நம: அஸ்துதே மம அஶேஷம் ருணம் ஆஶு விமோசய| பூமி புத்ர மஹாதேஜ: ஸ்வேதோத்பவ பினாகின: | ருணார்தஸ் த்வாம் ப்ரபன்னோஸ்மி க்ருஹாண அர்க்யம் நமோஸ்துதே|

அங்காரக அஷ்டோத்தர சத நாமாவளி

(சிவப்பு மலர்களினாலோ குங்குமத்தாலோ பிம்பத்தில்

அர்ச்சனை செய்யலாம். தினம் அர்ச்சனை செய்ய இயலாதவர்கள் செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் செய்யலாம்.

ஓம் மஹீஸுதாய நம:
மஹாபாகாய ,,
மங்களாய ,,
மங்களப்ரதாய ,,
மஹாவீராய ,,
மஹாசூராய ,,
மஹாபல-
பராக்ரமாய ,,
மஹாரௌத்ராய ,,
மஹாபத்ராய ,,
மானனீயாய ,,
தயாகராய ,,
மானதாய ,,
அபர்வணாய ,,
க்ரூராய ,,
தாபத்ரய
விவர்ஜிதாய
ஸுப்ரதீபாய ,,
ஸுதாம்ராக்ஷாய ,,
ஸுப்ரம்ஹண்யாய ,,
ஸுகப்ரதாய ,,
வக்ரஸ்தம்பாதி
கமனாய ,,
வரேண்யாய ,,
வரதாய ,,
ஸுகினே ,,
வீரபத்ராய ,,
விரூபாக்ஷாய ,,
விதூரஸ்த்தாய ,,
விபாவஸவே ,,
நக்ஷத்ர சக்ர
ஸஞ்சாரிணே ,,
க்ஷத்ரபாய ,,
க்ஷாத்ரவர்ஜிதாய ,,

ஓம் க்ஷயவிருத்திவினிர்
முக்தாய நம:
க்ஷமாயுக்தாய ,,
விசக்ஷணாய ,,
அக்ஷீணபலதாய ,,
சதுர்வர்க-
பலப்ரதாய ,,
வீதராகாய ,,
வீதபயாய ,,
விஜ்வராய ,,
விச்வகாரணாய ,,
நக்ஷத்ரராசி
ஸஞ்சாராய ,,
நாநாபய-
நிக்ருந்தனாய ,,
பந்தாருஜன
பாந்தாராய ,,
வக்ராகுஞ்சித
மூர்த்தஜாய ,,
கமனீயாய ,,
தயாஸாராய ,,
கனத்கனகபூஷணாய ,,
பயக்னாய ,,
பவ்யபலதாய ,,
பக்தாபய
வரப்ரதாய ,,
சத்ருஹந்த்ரே ,,
ஶமோபேதாய ,,
சரணாகத
போஷகாய ,,
ஸாஹஸினே ,,
ஸத்குணாத்யக்ஷாய ,,
ஸாதவே ,,
ஸமரதுர்ஜயாய ,,

ஓம் துஷ்டதூராய நம:
ஶிஷ்டபூஜ்யாய ,,
ஸர்வகஷ்ட நிவாரகாய ,,
துச்சேஷ்டா வாரகாய ,,
துக்க பஞ்ஜனாய ,,
துர்த்தராய ,,
ஹரயே ,,
துஸ்ஸ்வப்ன ஹந்த்ரே ,,
துர்த்தர்ஷாய ,,
துஷ்டகர்வ விமோசனாய ,,
பரத்வாஜ-குலோத்பூதாய ,,
பூஸுதாய ,,
பவ்யபூஷணாய ,,
ரக்தாம்பராய ,,
ரக்த வபுஷே ,,
பக்தபாலன-தத்பராய ,,
சதுர்ப்புஜாய ,,
கததாரிணே ,,
மேஷவாஹாய ,,
மிதாஶனாய ,,
சக்தி சூலதராய ,,
சக்தாய ,,
சஸ்த்ர வித்யா விஶாரதாய ,,
தார்கியாய ,,
தாமஸாதாராய ,,
தபஸ்வினே ,,
தாம்ரலோசனாய ,,
தப்த காஞ்சன ஸங்காஶாய ,,

ஓம் ரக்த கிஞ்ஜல்க ஸன்னிபாய நம:
கோத்ராதி தேவதாய ,,
கோமத்ய சராய ,,
குண விபூஷணாய ,,
அஸ்ருஜே ,,
அங்காரகாய ,,
அவந்தி-தேசாதீசாய ,,
வக்த்ரே ,,
தேவாதீசாய ,,
ஜனார்தனாய ,,
ஸூர்யயாம்ய ப்ரதேஶஸ்த்தாய ,,
யௌவனாய ,,
யாம்ய திங்முகாய ,,
த்ரிகோண மண்டல கதாய ,,
த்ரிதஶாதிப ஸன்னுதாய ,,
ஶுசயே ,,
ஶுசிகராய ,,
சூராய ,,
ஶுசிவஶ்யாய ,,
ஶுபாவஹாய ,,
மேஷவ்ருச்சிக ராஶீஶாய
மேதாவினே ,,
மிதபாஷிணே ,,
ஸுகப்ரதாய ,,
ஸுரூபாக்ஷாய ,,
ஸர்வாபீஷ்ட பலப்ரதாய ,,
ஸ்ரீமதே அங்காரகாய நம:

செவ்வாய் பகவான் நூல் முற்றிற்று

|| சுபம் ||

ஓர் அரிய வாய்ப்பு

ஜோதிடம் தபாலில் கற்கலாம்

தமிழ் / ENGLISH

தம்முடைய நாற்பத்தேழு ஆண்டுகளுக்கும் மேலான ஜோதிட அனுபவமும் பரம்பரைக் கலைஞானமும் பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கி இருக்கிறார். இம்முறையில் ஜோதிடம் பயில 4 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். பாடங்களுடன் வினாத்தாளும் சேர்த்து அனுப்பப்படும்.

4 மாத முடிவில் 'கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்பின் சார்பில் அருமையான Diploma வழங்கப்படும். மாணவர்களுக்கு மட்டும் எங்களுடைய புத்தகங்கள் சலுகை விலையில் தரப்படும்.

அட்மிஷன் பாரத்துக்கும், கட்டணம், பாடத்திட்டம் முதலான எல்லா விவரங்கள் அடங்கிய Prospectus-க்கும் ரூ. 12-00 M.O செய்யவும். English கோர்ஸுக்கான Prospectus வேண்டுவோர் ரூ. 15-00 M.O செய்யவும்.

வெளி நாட்டோர் கட்டணம் முதலான எல்லா விவரங்களுக்கும் £ British Postal Order அனுப்புக.

Prospectus-இன் விலையோ, கல்வியின் கட்டணமோ முன்னறிவிப்பின்றி மாறறப்படலாம். எனவே அவ்வப்போது நிலையைக் கேட்டறிந்து M.O./B.P.O. செய்க.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

Kadalangudi Astrological Research Centre
38, Natesa Iyer Street
Madras - 600 017
INDIA

ஆசிரியை K. N. ஸ.-ஐப் பற்றி

MA., M.Ed., Doctorate in Counselling, Diplomas in Naturopathy, Yoga, Art and Computer Science.



டாக்டர் கே. என். சரஸ்வதி அம்மையார் தொடக்கக் காலத்தில் பாரத சாரணர் இயக்கத்தின் வழிகாட்டி - முதல்வராகவும் **(Guide - Captain)** காந்தி கிராமம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒன்றியத் துணைச் செயலாளராகவும் சென்னை-பள்ளிகள் முன்னேற்ற மாநாட்டு **(schools – improvement - Conference)** உறுப்பினராகவும் சென்னை - தியாகராயநகர் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆலோசனைக் குழுவின் செயலாளராகவும், சென்னை வித்யோதயா பெண்கள் ஆங்கிலப்பள்ளியின் பொருளாளராகவும் தியாகராயநகர் பெண்கள் கூட்டுறவு மன்றத்தின் இயக்குநராகவும் பல துறைகளில் பரபரப்பாகப் பணியாற்றிய இவர், பின்னர் மன இயல் ஆய்வு நிறுவனத்தின் கிளை ஆய்வுத் தொடர்பாளராகவும் **(Field reporter)** அமெரிக்காவில் உள்ள சில மன இயல் துறை நிபுணர்களின் சங்கங்களில் ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். பெண்களுக்கு, குறிப்பாக ஆதரவற்றோருக்கு, ஆங்கிலம், கணிதம், ஒழுங்கைப் பற்றிய பாடம் ஆகியவற்றைக் கற்றுத் தருவதில் இவருக்குச் சுமார் பத்தாண்டுகள் அநுபவம் உண்டு. கௌன்ஸெலிங் **(counselling)**, சம்பந்தப்பட்ட பல தேசிய, அனைத்துலக மாநாடுகளிலும் ஆய்வுப் பட்டறைகளிலும் (workshops) கலந்து கொண்டு அத்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் நல்ல ஆலோசகராக இருந்து தன் உதவியை வழங்கி வருகிறார். திருமதி **K, N.S.**, மகான்களின் வாழ்வும் வாக்கும், சிறப்புத் திருத்தலங்கள், பதஞ்சலி யோக ஸூத்திரம், இறப்பும் பின் பிறப்பும், தன் மதிப்பை உயர்த்த வழிகள், சிநேகம் சிறக்கச் சிந்தனைகள் உழைப்பின் உயர்வில் வாழ்வு, திருமணம், இயற்கை வைத்தியம், பெண்களுக்காக, நவராத்திரி போன்ற நூல்களின் ஆசிரியை ஆவார்.